# செய்திக்குறிப்பு

2020-2021 முதல் 2022 -2023 முடிய உள்ள அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 2849 முதுகலை ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர் நிலை-1/ கணினி பயிற்றுநர் நிலை-1 காலிப்பணியிடங்களை நிரப்பிட பணிநாடுநர்கள் தெரிவு செய்து அளித்திட கேட்டுக்கொள்ளப்பட்டதையடுத்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித்தேர்வு நடத்தப்பட்டு தமிழ், ஆங்கிலம், இயற்பியல், கணிதம், வணிகவியல், பொருளியல் ஆகிய பாடங்களுக்கு பணி நாடுநர்கள் தெரிவுப்பட்டியல் (Selection List) பெறப்பட்டுள்ளது. இப்பணிநாடுநர்களுக்கு நேரடி நியமன கலந்தாய்வு 15.10.2022 சனிக்கிழமை சென்னையில் கீழ்க்காணுமாறு நடைபெற உள்ளது

| வ.எண். | கலந்தாய்வு நடைபெறும் மையத்தின் விவரம் | பங்குபெற வேண்டிய பணிநாடுநர்கள் (பாட வாரியாக) |
|---|---|---|
| 1 | மாகாண (Presidency) மகளிர் மேல்நிலைப்பள்ளி எழும்பூர், சென்னை-8 | தமிழ் |
| 2 | எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக்கட்டடம், முதல் தளம், டி.பி.ஐ. வளாகம், சென்னை-6 | ஆங்கிலம் |
| 3 | எம்.சி.சி. மேல்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை-31 | வணிகவியல் |
| 4 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர் சென்னை-83 | பொருளியல் |
| 5 | லேடி வெலிங்டன் மேல்நிலைப்பள்ளி, சென்னை-5 | கணிதம் |
| 6 | அண்ணா நூற்றாண்டு நூலகம், கோட்டூர்புரம், சென்னை-85 | இயற்பியல் |

14.10.2022 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய (trb.tn.nic.in) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள மேற்கண்ட பாடங்களுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட (Provisional selection list) பட்டியலில் இடம் பெற்றுள்ள பணிநாடுநர்கள், தங்களின் சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்ட கடிதம் (CV Call letter), Provisional selection letter மற்றும் அனைத்துக் கல்விச் சான்றிதழ்களின் நகல்களுடன் 15.10.2022 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

13.10.22

ஆணையர்

13/10/2022